# வீரமும் வீரதீரச்செயல்களும்

ஒரு இரவுநேரம், மதீனாவாசிகள் அனைவருமே ஒரு பயங்கரமான சப்தத் தைக்கேட்டார்கள், மக்கள் அச்சம் கொண்டனர். என்னவென்று கண்டறிவ தற்காக சப்தம் கேட்ட திசையில் விரைந்துசென்றார்கள், அங்கே இறைத் தூதர் ﷺ அவர்கள் அத்திசையிலிருந்து திரும்பிவருவதைக் கண்டார்கள், அதாவது மக்கள் விரைவதற்கு முன்பாகவே அதனைப்பற்றிக் கண்டறிய இறைத்தூதர் ﷺ அவர்கள் அங்கு சென்றுள்ளார்கள். அவர்களைச் ﷺ சந்தித்தபோது மக்களுக்கு ஆறுதலளிக்கும் வகையில், பயப்பட வேண்டிய விஷயம் ஒன்றுமில்லை, பயப்படத்தேவையில்லை என்று கூறினார்கள் **(متفق عليه).**

ஹஜ்ரத் உமர் பின் க்ஹத்தாப் (ர) அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் பைத் துல்மாலில் துணி பெறப்பட்டது. அவர்கள் அதனை மக்களிடையே சரிசம மாகப் பங்கிட்டளித்துவிட்டார்கள். அதே துணியினால் தைக்கப்பட்ட ஒரு ஜுப்பா (மேலங்கியை) அணிந்தவாறு அவர்கள் மிம்பரின் மீதிருந்து மக்களுக்கு உபதேசம் செய்பவராகக் கூறினார்கள், மக்களே, கேளுங்கள் மற்றும் அதனைப் பின்பற்றுங்கள். அமர்ந்து கேட்டுக்கொண்டிருந்த ஒருவர் எழுந்து கூறினார், நாங்கள் கேட்கவும் மாட்டோம் பின்பற்றவும் மாட் டோம். கேட்டார்கள் என்ன காரணம்? அவர் கூறினார் அனைவருக்கும் துணி சரிசமமாகக் கிடைத்தது, இவ்வளவு சிறிய துணியில் இவ்வளவு நீள மான ஜுப்பா தைக்கவே முடியாது, நீங்கள் எவ்வாறு தைத்துக்கொண் டீர்கள்? அதற்கு அவர்கள் தன்னுடைய மகனான ஹஜ்ரத் அப்துல்லா (ர) அவர்களுக்கு சைகை செய்து உண்மையை எடுத்துக்கூறுமாறு சொன்னார் கள். அவர்கள் எழுந்து நின்று கூறினார்கள், நான் என்னுடைய பங்கை என் னுடையதகப்பனாருக்குக்கொடுத்துவிட்டேன்,அவர்களுக்குத் தேவையான தாக இருந்தது, அதைக்கொண்டுதான் இவ்வளவு நீளமான ஜுப்பா தைக்க முடிந்தது. பதிலைக்கேட்ட அந்த மனிதர் கூறினார், சரி, இப்போது கூறுங்கள் நாங்கள் கேட்கிறோம் அதனைப் பின்பற்றவும் செய்வோம்.

கஷ்டமான நிலையிலும் தைரியத்தை வெளிப்படுத்துவதும் அச்சமின்றி இருப்பதும்தான் வீரமும் வீரதீரச்செயலுமாகும். இறைத்தூதர் ﷺ அவர் களின் வாழ்க்கை இவ்விஷயத்திலும் நமக்காக ஒரு சிறந்த உதாரணமாக வும் முன்மாதிரியாகவும் உள்ளது. போர்களில் நிலைமை மிகவும் கடுமை யானதாக ஆகிவிடும் நேரங்களில் நபித்தோழர்கள் இறைத்தூதர் ﷺ அவர்களின் பக்கத்தில் சென்று தங்களைப் பாதுகாத்துக்கொள்வார்கள். ஹஜ்ரத் அலி (ர) அவர்கள் கூறுகிறார்கள், போர் தீவிரமடைந்து கடும் சண்டை மூளும்போது நாங்கள் இறைத்தூதர் ﷺ அவர்களின் பாதுகாப்

www.uzairlahi.com

பில் வந்துவிடுவோம், அவர்கள் ﷺ எதிரிகளுக்கு மிகவும் அருகில் இருப்பார்கள். ஹஜ்ரத் பரா (ர) அவர்கள் கூறுகிறார்கள், நாங்கள் போர் களில் இறைத்தூதர் ﷺ அவர்களைக் கொண்டு எங்களைப் பாதுகாத்துக் கொள்வோம்.

ஹுனைன் போர் சூடுபிடித்துள்ளது, எதிரிகளின் சரமாரியான அம்புவீச்சி னால் முஸ்லிம்கள் சீர்குலைந்துவிடும் நிலை, அதிக அளவில் மக்கள் தப்பி ஓடிக்கொண்டிருந்தனர், இம்மாதிரியான மிகவும் இக்கட்டான நிலையில் இறைத்தூதர் ﷺ அவர்கள் தங்களுடைய இடத்திலேயே நிகரற்ற வீரம் மற்றும் வீரதீரமான முறையில் எதிர்த்து நின்றார்கள். அவர்கள் ﷺ தன்னுடைய இருபுறங்களிலும் வாளை வீசியவர்களாக உரத்தக் குரலில் கூறிக்கொண்டிருந்தார்கள்:

أَنَا النَّبِيُّ لاَ كَذِبْ، أَنَا ابْنُ عَبْدِ المُطَّلِبْ

*நான் உண்மையான நபியாக இருக்கிறேன், நான் அப்துல் முத்தலிப் அவர்களுடைய வழிவந்தவனாவேன்.* அவர்களுடைய ﷺ இந்தக்கூக்குர லைக்கேட்டவர்கள் ஒவ்வொருவருமே உற்சாகமும் உணர்வுபூர்வமான எழுச்சியும் பெற்று மிகவும் வீரதீரமான முறையில் எதிரிகளைநோக்கிப் பாய்ந்துசென்று கடுமையான போர் புரிந்தனர், எந்த அளவிற்கு என்றால் அல்லாஹ் தஆலா முஸ்லிம்களுக்கு வெற்றிவாகை சூடினான். இறைத் தூதர் ﷺ அவர்களும் வீரத்தின் வடிவமாகவும் வீரதீரச்செயல்களின் நிகரற்ற முன்மாதிரியாகவும் செயல்பட்டு தன்னுடைய நபித்தோழர்களை எவ்வகையில் பயிற்சியளித்தார்கள் என்றால் இவர்கள் அனைவருமே பிற்காலத்தில் மாபெரும் படைத்தலைவர்களாகவும் தியாகம் மற்றும் உயிரையே தியாகம்செய்யும் மகத்தான வரலாறும் படைத்துள்ளார்கள்.

www.uzairfalahi.com

அவர்களுடைய ﷺ ஒரு நபித்தோழரான ஹஜ்ரத் அம்ருப்னுல் ஜமூஹ் (ர) அவர்கள் ஏதோ காரணத்தால் நொண்டியானவராக இருந்தார்கள், நட மாட முடியாதவராக முடைப்பட்டு இருந்தார்கள். இதன் காரணமாக அவ ருடைய மகன்கள் அவரை வீட்டிலேயே இருக்கும்படியும் ஜிஹாதில் கலந்துகொள்ளவேண்டாம் என்றும் வலியுறுத்தி வந்தார்கள். ஆனால், அவர்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை, நான் இந்த நொண்டியான கால்களுடனேயே சுவர்க்கத்தில் செல்ல விரும்புகிறேன் என்று கூறிவந்தார் கள். அவர்கள் இறைத்தூதர் ﷺ அவர்களிடம் போரில் கலந்துகொள்ள அனுமதி கோரினார்கள் அவர்களுக்கு அனுமதியும் கிடைத்துவிட்டது. இறுதியாக அவர்கள் போரில் கலந்துகொண்டார்கள் மற்றும் தன் உயிரைக் கொடுத்து ஷஹீதாகவும் ஆகிவிட்டார்கள்.

இதுபோன்றே ஹஜ்ரத் அலி (ர) அவர்களுடைய வீரதீரத்தின் நிகரற்ற உதாரணமும் உண்டு. அவர்கள் சிறுவயது முதற்கொண்டே மிகவும் தைரியமும் துடிப்புமுடையவராக இருந்தார்கள். ஹிஜ்ரத் மேற்கொள்ளப்பட்ட சமயத்தில் தன்னுடைய உயிரே பறிபோகும் என்று நன்றாகவே அறிந்திருந்த போதிலும் அவர்கள்தான் இறைத்தூதர் ﷺ அவர்களின் படுக்கையில் தூங்கினார்கள். ஆனால், இறைத்தூதர் ﷺ அவர்கள் பத்திரமாக மதீனா சென்றடையவேண்டும் என்பதற்காக அவர்கள் தெரிந்தே தன்னுடைய உயிரை அபாயத்திற்கு ஆளாக்கினார்கள்.

முஅத்தா போரில் ஹஜ்ரத் அப்துல்லா பின் ரவாஹா (ர) அவர்கள், ஹஜ்ரத் ஜ்ஸைத் பின் ஹாரித்ஸா (ர) அவர்கள் மற்றும் ஹஜ்ரத் ஜாஃபர் பின் அபீ தாலிப் (ர) அவர்கள் காட்டிய வீரதீரப்பண்புகள் அவை வரலாற்றின் மிகப் பிரகாசமான நிகழ்வுகளாகும். ஹஜ்ரத் க்ஹாலித் பின் வலீத் (ர) அவர்களுடைய வீரம் மற்றும் பேராற்றல் உலகுக்கே உதாரணமாக அமைந்தது. இந்தத் திறமையின் காரணமாகவே இறைத்தூதர் ﷺ அவர்கள் அவர்களை ஸய்ஃபுல்லா (அல்லாஹ்வின் வாள்) என்ற பட்டத்தை வழங்கி னார்கள். அவர்கள் தன்னுடைய இறுதி நாட்களில் மிகவும் கவலையுடைய வராக இருந்தார்கள், என்ன கைசேதம் நான் என்னுடைய படுக்கையில் மரணித்துக்கொண்டிருக்கிறேன். ஆனால், அவருடைய உடலின் எந்தப்பகுதி யும் காயங்களின் அடையாளங்கள் இல்லாமலிருக்கவில்லை. இவை எல்லாவற்றிற்குப்பின்பும் அவருக்கு அல்லாஹ்வின் பாதையிலான மரணம் ஷஹாதத் எனும் பாக்கியம் கிடைக்கவில்லை. இதன் காரணமாவே அவர்கள் மிகவும் கவலையும் வருத்தமும் கொண்டிருந்தார்கள்.

வீரம் மற்றும்பேராற்றல் மிக்கசம்பவங்கள் ஆண்களில் மட்டுமே பெறப்படவில்லை, இறைத்தூதர் ﷺ அவர்களுடைய வழிநடத்துதலின் காரணமாகப் பெண்களும் இந்த உணர்வுகளைப் பெற்றிருந்தனர். ஹஜ்ரத் உம்மு அம்மாரஹ் (ர) அவர்கள், ஹஜ்ரத் உம்மு அதிய்யஹ் (ர) அவர்கள், ஹஜ்ரத் உம்மு சுலைம் (ர) அவர்கள் மற்றும் ஹஜ்ரத் லைலா க்நஃப்பாரியா (ர) அவர்கள் மற்றும் அவர்களைத்தவிர மேலும் பல ஸஹாபியாக்கள் (ர) இஸ்லாமியப் படைகளில் இடம்பெற்றுள்ளனர். காயமடைந்தவர்களுக்கு முதலுதவி, கட்டுப்போடுதல், முஜாஹிதீன்களுக்கு தண்ணீர் வழங்குதல், அவர்களுக்கு உணவு ஏற்பாடு செய்தல், தேவைப்படும்போது அவர்கள் ஆற்றிய மற்ற சேவைகளைுக்காக அவர்கள் பெயர்பெற்று விளங்கியதோடு, தொடர்ந்து நினைவுகூறப்பட்டும் வருவார்கள்.

வீரம் மற்றும் தைரியத்தின் இந்த ஆர்வ எழுச்சி போர்க்காலங்களில் மட்டும் இருந்ததில்லை, மாறாக, இஸ்லாத்தை நிலைநாட்டும், பாதுகாக்கும்

www.uzairfalahi.com

*மற்றும் அதன் தேவைகளைப் பூர்த்திசெய்யும் அனைத்துப் பணிகளிலும் தொடர்ந்து செயல்பட்டு வந்துள்ளதைக் காணமுடிகிறது. மிகப் பிரபலமான ஹஜ்ரத் க்ஹவ்லா பின்த் த்ஸஃலபஹ் (ர) அவர்கள் வழியில் அமீருல் முஃமினீன் ஹஜ்ரத் உமர் (ர) அவர்களைச் சந்திக்கிறார்கள், அவர்களை நிறுத்தி அவர்களுக்கு அறிவுரை கூற ஆரம்பிக்கிறார்கள், அங்கே ஹஜ்ரத் உமர் (ர) அவர்கள் நின்றுகொண்டே கேட்டுக்கொண்டிருக்கிறார்கள், மிகவும் மரியாதையுடன், அவரோ நீண்டநேரம் அறிவுரை கூறிய வண்ணம் பேசிக் கொண்டே இருந்தார்கள். ஹஜ்ரத் உமர் (ர) அவர்களும் நிசப்தமாக அசையாமல் காதுகொடுத்து நின்ற நிலையில் அவர்களுடைய பேச்சைக்கேட்டுக் கொண்டிருந்தார்கள்.*

*இறைத்தூதர் ﷺ அவர்கள் வீரப்பண்புகளை எந்த அளவிற்கு உண்டாக்கினார்கள் என்றால் வாலிப வயதுள்ள நபித்தோழர்களும் உற்சாகமும் எழுச்சியும் பெற்று விளங்கினர். ஒரு முறை இறைத்தூதர் ﷺ அவர்கள் தன்னுடைய தோழர்களுடன் ஒரு போருக்காகப் புறப்பட்டுச்சென்றுகொண்டிருந்தார்கள். அவர்கள் படையினரின் அணிவகுப்பைப் பார்வையிட்டுக்கொண்டிருந்தபோது சிறுவராக இருந்த உமைர் பின் அபி வஃக்காஸ் (ர) சிறு வயதுடையவர் என்ற காரணத்திற்காகத் தம்மைத் திருப்பி அனுப்பிவிடக் கூடாதுஎன்றுஅஞ்சிமறைந்துகொள்வார்கள். கடைசியில்அவர்கள்கொண்டு வரப்பட்டு அவர்கள் அஞ்சியதுபோன்றே அவர்களைத் திரும்பிச்சென்று விடும்படி கூறப்பட்டபோது அவர்கள் உணர்ச்சிவசப்பட்டு அழ ஆரம்பித்து விட்டார்கள். இறைத்தூதர் ﷺ அவர்கள் அவர்கள் மீதான அன்பு பாசத் தின் காரணமாக போர்ப்படைகளுடன் செல்வதற்கு அனுமதி வழங்கிவிட்டார்கள்.*

www.uzairalahi.com

*வீரப்பண்புகளையும் உணர்வுகளையும் வெளிப்படுத்தும் நிலைகள் வெவ்வேறாக இருக்கும், அவற்றை நாம் வீரப்பண்புகளின் விதங்கள் என்றும் கூறலாம். உதாரணமாக:*

★ *மாரூஃப் (நன்மையை) ஏவுதல் மற்றும் முன்கர் (தீமையானவற்றிலிருந்து) தடுப்பதிலும் தைரியத்தை வெளிப்படுத்தவேண்டும். இறைத்தூதர் (ஸல்) அவர்களும் எவரும் ஹராமான ஒரு செயலைச் செய்யாத வரையில் எவ்விஷயத்திலும் கோபப்படமாட்டார்கள். அச்சமயத்தில் அவர்கள் தம்முடைய அதிருப்தியை வெளிப்படுத்துவார்கள் மற்றும், அதனைச் செய்தவரை அவ்வாறு செய்யவேண்டாம் என்று தடுப்பார்கள் மற்றும் நற்காரியங்களைச் செய்யுமாறு கட்டளையிடுவார்கள். இதனையே அவர்கள் (ஸல்) நபித்தோழர்களுக்கும் போதித்தார்கள். திருக்ஃகுர்ஆனிலும் அல்லாஹ் தஆலா இதனையே கூறுகிறான்:*

ٱلَّذِينَ إِن مَّكَّنَّٰهُمۡ فِي ٱلۡأَرۡضِ أَقَامُواْ ٱلصَّلَوٰةَ وَءَاتَوُاْ ٱلزَّكَوٰةَ وَأَمَرُواْ بِٱلۡمَعۡرُوفِ وَنَهَوۡاْ عَنِ ٱلۡمُنكَرِۗ وَلِلَّهِ عَٰقِبَةُ ٱلۡأُمُورِ ﴿٤١﴾ (الحج: 41)

*பொருள்: அவர்கள் எத்தகையவர்கள் எனில், நாம் அவர்களுக்குப் பூமியில் ஆட்சியதிகாரத்தை வழங்கினால் அவர்கள் தொழுகையை நிலை நிறுத்துவார்கள், ஜ்ஸகாத் வழங்குவார்கள், மேலும், நன்மை புரியுமாறு ஏவுவார்கள், தீமையிலிருந்து தடுப்பார்கள், மேலும் எல்லா விவகாரங்களின் முடிவும் அல்லாஹ்வின் கையில் உள்ளது.(அல் ஹஜ்: 41) மற்றொரு இடத்தில் கூறுகிறான்:*

وَمَا كَانَ ٱلۡمُؤۡمِنُونَ لِيَنفِرُواْ كَآفَّةٗۚ فَلَوۡلَا نَفَرَ مِن كُلِّ فِرۡقَةٖ مِّنۡهُمۡ طَآئِفَةٞ لِّيَتَفَقَّهُواْ فِي ٱلدِّينِ وَلِيُنذِرُواْ قَوۡمَهُمۡ إِذَا رَجَعُوٓاْ إِلَيۡهِمۡ لَعَلَّهُمۡ يَحۡذَرُونَ ﴿١٢٢﴾ (التوبة: 122)

*பொருள்: மேலும், இறை நம்பிக்கைகொண்டவர்கள் அனைவருமே புறப்படவேண்டுமென்பது தேவையில்லை. எனினும், அவர்கள் வாழும் ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒரு சிலர் மட்டும் புறப்படலாமே, எதற்காகவெனில், மார்க்க அறிவை அவர்கள் பெற்றுக்கொண்டு தம் சமுதாயத்தாரிடம் திரும்பிவந்து அவர்களை எச்சரிக்கை செய்யவேண்டும் என்பதற்காக. இதன் வாயிலாக(இஸ்லாத்திற்குமாற்றமான போக்கை) அவர்கள் தவிர்த்துக்கொள்ளக்கூடும்.(அத் தவ்பா: 122).*இறைத்தூதர் *(ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்:* قُلِ الْحَقَّ وَإِنْ كَانَ مُرًّا *பொருள்:* உண்மையையே பேசுங்கள், அது கசப்பானதாக இருப்பினும் சரியே (அஹ்மத்). மற்றொரு நபிமொழியில் கூறப்பட்டுள்ளது:

**مَنْ رَأَى مِنْكُمْ مُنْكَرًا فَلْيُغَيِّرْهُ بِيَدِهِ، فَإِنْ لَمْ يَسْتَطِعْ فَبِلِسَانِهِ، فَإِنْ لَمْ يَسْتَطِعْ فَبِقَلْبِهِ، وَذَلِكَ أَضْعَفُ الْإِيمَانِ**

*பொருள்: உங்களில் எவரும் ஒரு தீமையான செயலைக் கண்டால் அதனைத் தன் கைகளால் வலிமையுடன் அகற்றிவிடவேண்டும். அவ்வாறு செய்ய இயலவில்லையென்றால் நாவினால் அதனை எதிர்த்துக் குரல் கொடுக்கவேண்டும், இதுவும் இயலாத நிலையில் அதனை தம் மனதார தீமையானது என்று கருதவேண்டும், இது ஈமானின் மிகவும் பலவீனமான நிலையாகும் (முஸ்லிம்).* இறைத்தூதர் ﷺ அவர்கள் தீமைகளுக்கு எதிராக உறுதியுடன் நிற்குமாறு கூறி அவ்வழியில் தைரியத்துடன் செயல்படவேண்டும் என்று ஊக்குவிக்கும் வகையில் கூறினார்கள்: அல்லாஹ்வின் பாதையில் ஷஹீதானவர்களின் தலைவர் ஹம்ஜ்ஸா பின் அப்துல் முத்தலிப் ஆவார்கள், மேலும் யார் ஒரு கொடுங்

www.uzairfalahi.com

*கோல் மன்னரை எதிர்த்து நிற்பார்களோ, அவரை நற்காரியங்களைச் செய்யக் கட்டளையிட்டு தீமையானவற்றிலிருந்து தடுப்பார்களோ மற்றும் அவ்வழியிலேயே கொல்லப்படுவார்களோ அவர்களும்கூட (அல் ஹாகிம்)*

★ *வீரம் மற்றும் தைரியத்தை வெளிப்படுத்துவது சக்தியையும் ஆற்றலையும் பயன்படுத்தவேண்டிய தேவை ஏற்படும் நிலைகளில் மட்டுமல்ல. ஒரு மனிதன் தன்னுடைய சொந்தக் குறைபாடுகள் மற்றும் பலவீனங்களுக்கு எதிராக நின்றாலும் அதுவும் தைரியமான வீரச்செயலாகவே கருதப்படும். உதாரணமகாக, ஒரு மாணவன் தன்னுடைய குறைவான கல்வியாற்றலை மறைக்காமல் ஒருவரிடம் ஒரு கேள்வியைக் கேட்டால் மற்றும் அதிகமான விஷயங்களைத் தெரிந்துகொள்வதற்காக தன்னுடைய இச்சைகளுக்கே எதிராக முயற்சிகளை மேற்கொண்டால் அதுவும் வீரச்செயலேயாகும். ஆகவே, நபித்தோழர்கள் (ர) எவ்விதமான வெட்கப்படும் வகையிலான உணர்வுமின்றி தன்னைவிடச் சிறியவர்களிடமிருந்தும் கல்வி கற்றனர். ஆண்கள், பெண்கள் இருவருமே இவ் விஷயத்தில் ஒரே மாதிரியாக நடந்துகொண்டனர்.*

★ *தன்னுடைய தவறுகளை ஒப்புக்கொள்வதும் ஒரு வகையான வீரச்செயலாகும். இவ்விஷயத்தில் ஒரு மனிதன் தனக்கே எதிராகப் போரிட வேண்டியிருக்கும் மற்றும் தன்னுடைய ஆசைகளையும் இச்சைகளையும் ஒடுக்கவேண்டியிருக்கும். இது ஒரு சாதாரண விஷயமல்ல, இதனால்தான் கூறப்படுகிறது வீரன் யார் என்றால் எவன் தன்னுடைய கோபத்தைக்கட்டுப்படுத்துகிறானோ அவன்தான். தன்னுடைய தவறுகளை ஒப்புக்கொள்வது மற்றும் உண்மையை ஏற்றுக்கொள்வது என்பது மிகவும் தைரியத்துடனான செயலாகும், இதற்கான முன்மாதிரியும் உதாரணமும் நமக்கு நபிமார்களின் வாழ்க்கையில் கிடைக்கின்றது. ஹஜ்ரத் ஆதம் (அ) அவர்கள் தன்னுடைய தவறை ஒப்புக்கொண்டு அல்லாஹ்விடத்தில் பாவமன்னிப்புக்கோரி துஆ கேட்டார்கள். இது போன்றே ஹஜ்ரத் யூனுஸ் (அ) அவர்களும் மீனுடைய வயிற்றிலிருந்தவாறே தன்னுடைய தவறுக்காக அல்லாஹ்விடம் மன்னிப்புக்கேட்டுக் கூறினார்கள்:*

**لَآ إِلَٰهَ إِلَّآ أَنتَ سُبۡحَٰنَكَ إِنِّي كُنتُ مِنَ ٱلظَّٰلِمِينَ ﴿٨٧﴾ (الأنبياء: 87)**

*பொருள்: உன்னைத்தவிர வேறு இறைவன் இல்லை, நீ தூய்மையானவன். நிச்சயம், நான்தான் குற்றம் செய்துவிட்டேன்.(அல் அன்பியா: 87)*

*ஒரு முஸ்லிம் இயல்பாகவே வீரப்பண்பும் தைரியமும் கொண்டவராக இருப்பார். இதனால்தான் அவர் ஒரு பாவச்செயலைச் செய்துவிட்டால், எச்சரிக்கப்பட்டால் அவர் உடனே வெட்கப்பட்டவராக, தன்னு*

www.fizaifalahi.com

டைய செயலுக்காக வருந்தி தன்னுடைய இறைவனிடம் பாவமன்னிப்புக்கோரி துஆ செய்கிறார்.

★ போர்க்களத்தில் உண்மையை நிலைநாட்டவும் பொய்யானவற்றை அழிக்கவும் தன்னுடைய உயிரையே தியாகம் செய்யும் அளவிற்குப் போராடுதல் ஆகியன வீரதீரர்களின் செயல்களாகும். அல்லாஹ் தஆலா முஸ்லிம்களுக்கு இதற்கான கட்டளையும் இடுகின்றான்.

وَأَعِدُّواْ لَهُم مَّا ٱسۡتَطَعۡتُم مِّن قُوَّةٖ وَمِن رِّبَاطِ ٱلۡخَيۡلِ تُرۡهِبُونَ بِهِۦ عَدُوَّ ٱللَّهِ وَعَدُوَّكُمۡ

وَءَاخَرِينَ مِن دُونِهِمۡ لَا تَعۡلَمُونَهُمُ ٱللَّهُ يَعۡلَمُهُمۡۚ ﴿٦٠﴾ **(الأنفال: 60)**

பொருள்: *மேலும், அவர்களை எதிர்த்துப்போராடுவதற்கு உங்களால் முடிந்த அளவு அதிகமான வலிமையையும் தயார்நிலையிலுள்ள குதிரைப்படையையும் திரட்டி வையுங்கள். இவற்றின் மூலம் அல்லாஹ்வுக்கும் உங்களுக்கும் பகைவர்களாக உள்ளவர்களையும் இவர்கள் அல்லாத மற்றவர்களையும் நீங்கள் திகிலிடச்செய்திட வேண்டும். அந்தப் பகைவர்களை நீங்கள் அறியமாட்டீர்கள், ஆனால், அல்லாஹ் அவர்களை அறிவான்.(அல் அன்ஃபால் 60)*

*மற்றொரு இடத்தில் அல்லாஹ் கூறுகிறான்:*

إِنَّ ٱللَّهَ يُحِبُّ ٱلَّذِينَ يُقَٰتِلُونَ فِي سَبِيلِهِۦ صَفّٗا كَأَنَّهُم بُنۡيَٰنٞ مَّرۡصُوصٞ ﴿٤﴾ **(الصف: 4)**

பொருள்: *எவர்கள் அல்லாஹ்வுடைய வழியில் ஈயத்தால் வார்க்கப்பட்ட சுவரைப்போன்று உறுதியாக அணிவகுத்து நின்று போர் புரிகின்றார்களோ அவர்களையே அல்லாஹ் நேசிக்கிறான்.(அஸ் ஸஃப்: 4)*

*சூரா அல் அன்ஃபாலில் கூறுகிறான்:*

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوٓاْ إِذَا لَقِيتُمۡ فِئَةٗ فَٱثۡبُتُواْ وَٱذۡكُرُواْ ٱللَّهَ كَثِيرٗا لَّعَلَّكُمۡ تُفۡلِحُونَ **(الأنفال:45)**

பொருள்: *இறை நம்பிக்கை கொண்டவர்களே, ஏதேனும் ஒரு குழுவினரோடு நீங்கள் போரிடும்போது நிலைகுலையாமல் இருங்கள். மேலும், அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூறுங்கள், நீங்கள் வெற்றியடையலாம்.(அல் அன்ஃபால் 45)*

*மேலும் கூறப்பட்டுள்ளது:*

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوٓاْ إِذَا لَقِيتُمُ ٱلَّذِينَ كَفَرُواْ زَحۡفٗا فَلَا تُوَلُّوهُمُ ٱلۡأَدۡبَارَ ﴿١٥﴾ **(الأنفال: 15)**

பொருள்: *இறை நம்பிக்கை கொண்டவர்களே, நீங்கள் படையாகத் திரண்டுசென்று இறை நிராகரிப்பாளர்களுடன் போரிட நேர்ந்தால் அவர்களுக்குப் புறமுதுகு காட்டி ஓடாதீர்கள்.(அல் அன்ஃபால் 15)*

www.uzairfalahi.com

ஒரு முஸ்லிம் மரணத்தைக்கண்டு அஞ்சுவதில்லை, மாறாக, அவனுடைய வீரமும் தைரியமும் அல்லாஹ்வின் பாதையில் தன்னுடைய உயிரையே தியாகம் செய்ய அவனைத் தயாராக ஆக்கிவிடுகின்றது:

یہ غازی یہ تیرے پر اسرار بندے جنہیں تونے بخشا ہے ذوق خدائی
دو نیم ان کی ٹھوکر سے صحرا اور دریا سمٹ کر پہاڑ ان کی ہیبت سے رائی
دو عالم سے کرتی ہے بے گانہ دل کو عجب چیز ہے لذت آشنائی
شہادت ہے مطلوب و مقصود مومن نہ مال غنیمت نہ کشور کشائی

இறைத்தூதர் ﷺ அவர்கள் சக்தி மற்றும் ஆற்றலைப் பெற்றிருப்பதை ஊக்குவித்தார்கள், இவ்வகையில் அவர்கள் ﷺ கூறுகிறார்கள்:

**الْمُؤْمِنُ الْقَوِيُّ، خَيْرٌ وَأَحَبُّ إِلَى اللهِ مِنَ الْمُؤْمِنِ الضَّعِيفِ، وَفِي كُلٍّ خَيْرٌ احْرِصْ عَلَى مَا يَنْفَعُكَ، وَاسْتَعِنْ بِاللهِ وَلَا تَعْجَزْ**

பொருள்: *அல்லாஹ்விடத்தில் ஒரு ஆற்றல்மிக்க முஃமின் வலிமையற்ற முஃமினைக்காட்டிலும் மிகவும் பிரியமானவனாகவும் சிறந்தவனாகவும் இருக்கின்றான், அந்த இருவரிடமும் நன்மையானவைகள் இருந்தபோதிலும்கூட. எது உங்களுக்கு அதிகம் பயனுள்ளதாக இருக்கின்றதோ அதில் பேராசை கொண்டு அதனையே விரும்புங்கள், அல்லாஹ்விடத்தில் உதவி நாடுங்கள்,இயலாதவர்களாகவும் முடைப்பட்டவர்களாகவும் உட்கார்ந்து விடாதீர்கள் (முஸ்லிம்).* ஒரு முஃமினும் வீரமும் ஒன்றையொன்று இணை பிரியாதவைகள், இது இல்லாமல் ஒரு முஃமின் மார்க்கத்தின் கடமைகளை அதற்கான முறையில் நிறைவேற்ற முடியாது.

* * *

www.uzaifalahi.com